<u>அ.வ.எண்.**54/2021** பி.வா.சா.**1 –** மகாமுனி **21.03.2025**</u>

<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் வாதிகள் எனக்கு வீடு விற்றுவிட்டனர். அதுகுறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர். 1, 2 பிரதிவாதிகள் எந்த தேதியில் எனக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்தனர் என்றால் 25.11.2013 அன்று எழுதிக்கொடுத்தனர். எனது கிரய ஆவணத்தில், 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில்படி பாத்தியப்பட்டு, ஆயுள்வரை அனுபவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் எந்த தேதியில் மூலஆவணங்களை என்னிடம் கொடுத்தனர் என்றால் என்னுடைய கிரயத்திற்கு 2-3 நாட்களுக்கு முன்பு கொடுத்தனர். 2012 ம் வருடம் அக்டோபர் மாதத்தில், 2 ம் பிரதிவாதி எனது பராமரிப்பில் இருந்த பெட்ரோல் பங்கில் வேலைக்கு சேர்ந்தார். 2 ம் பிரதிவாதி அவருடைய மூல ஆவணங்களை பெட்ரோல் பங்கில் வைத்திருந்தார் என்றும், அவைகளை நான் எடுத்துச்சென்றுவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.8 உயில் ஆவணத்தில், என் ஆயுளுக்கு பின் என் மனைவி பாப்பாத்தி அவரது ஆயுள்வரை எவ்வித வில்லங்க பராதீனமும் செய்யாமல் அனுபவம் செய்து வந்து, அதன்பிறகு என் மகன் செந்தில்குமார் சர்வ சுதந்திரமாக ஆண்டனுபவித்துக்கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 உயில்படி, 1, 2 பிரதிவாதிகள் விற்பனை செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.17 கிரய ஆவணத்தில், கணேசன் மற்றும் கே.செல்வக்குமார் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர். மேற்சொன்ன சாட்சிகள் இருவரும் எனது பெட்ரோல் பங்கில் வேலைபார்த்து வந்தனர் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகள் இருவரும் பெட்ரோல் பங்கில் காசாளர்களாக வேலை பார்த்து வந்தனர் என்றால் .....

சரியல்ல. அதில் ஒருவர் மட்டும் காசாளராக பெட்ரோல் பங்க்கில் வேலைபார்த்து வந்தார். பி.வா.சா.ஆ.10 முதல் 16 ஆவணங்கள் பெட்ரோல்பங்க் வருமானவரி கணக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களாகும். அந்த ஆவணங்களில் பெட்ரோல் பங்க்கின் வரவு செலவுகள் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வாதியின் வங்கி கணக்கிலிருந்து தாவாச்சொத்திற்குரிய வீட்டுவரி, மின்கட்டணம், குடிநீர் கட்டணம் ஆகியவை செலுத்தப்பட்டுள்ளது என்றால் முதலில் நான் செலுத்தி வந்தேன். பின்னிட்டு, வாதிகள் வாடகை செலுத்ததால் வாடகையிலிருந்து அந்த கட்டணங்களை செலுத்துமாறு கூறிவிட்டேன். வாடகை ஒப்பந்தத்தை நான் என்னுடைய அடியாட்களை வைத்து மிரட்டி, வாதியிடமிருந்தும், 2ம் பிரதிவாதியிடமிருந்தும் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரியை அழைத்து வந்து, அவரை வைத்து மிரட்டி, வாடகை ஒப்பந்தத்தை எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.22 வாடகை ஒப்பந்த ஆவணத்திற்கான முத்திரைத்தாளை என் பெயரில் நான் வாங்கினேன். 1, 2 பிரதிவாதிகள் வாடகைக்கு இருக்கவில்லை என்றும், அதனால்தான் அவர்கள் பெயரில் முத்திரைத்தாள் வாங்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் ஒருமாதம் கூட வாடகை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் வாடகை செலுத்தியதற்கு ஆவணங்கள் ஒப்படைத்துள்ளேனா என்றால் ரொக்கமாக வாடகை செலுத்தினார்கள். நான் கிரயம் பெற்ற தேதியிலிருந்து, வழக்குச்சொத்தின் சுவாதீனம் என் வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் நான் அவர்களிடம் வாடகைக்கு ஒப்படைத்தேன்.

அருணாச்சலம் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்த நொடித்தவர் மனுவை அவராகவே திரும்பப்பெற்றுவிட்டார் என்றால் சமரசமாகிவிட்டார்கள்.

2018ம் வருடத்தில் என்னுடைய பெட்ரோல் பங்கிலுள்ள பெட்ரோல்கள் வறண்டுவிட்டன என்று 2ம் பிரதிவாதியிடம் நான் கூறினேன் என்றால் சரியல்ல. கிரய மறுபயனை செலுத்தியதற்கான ஆவணங்களை நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தவறான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.